**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெருந்துறை**

**முன்னிலை : திரு.என்.மூர்த்தி, B.Com.,B.L.,**

**நீதித்துறை நடுவர், பெருந்துறை**

**2026 ம் வருடம் ஜுன் திங்கள் 23 ம் நாள் செவ்வாய் கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 09 ம் நாள்**

**குற்றவியல் பல்வகை மனு எண். 168/2026**

**in**

CC.No.1/2019

கார்த்திகேயன், (39),

த/பெ. சண்முகம், ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,

பெருந்துறை காவல் நிலையம்,

குற்ற எண். 33/2016. ... எதிர்மனுதாரர்

இம்மனு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. மாணிக்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பார்வையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/ எதிரி தரப்பில் நிலுவையில் உள்ள குற்றவியல் விசாரணையில் மனுதாரரின் கடவுச்சீட்டு எண்.N5250119 யை புதுப்பிப்பதற்கு அனுமதி/ தடையில்லாச் சான்றிதழ் பெறுவதற்கான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

2.1) மனுதாரர்/எதிரி மீது பெருந்துறை காவல் நிலையம், குற்ற எண். 33/2016, இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு CC.No.1/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கானது விசாரணைக்காக 8 ஆண்டுகளாக இந்நீதிமன்றத்தில்

நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரர்/எதிரி மீது, நடைமுறைச் சட்ட விதிகளையும், போக்குவரத்து விதிமுறைகளையும் முறையாகப் பின்பற்றாமல், நிகழ்நிலை புகார்தாரர் அளித்த புகாரின் அடிப்படையில் புகார்தாரர் பொய்யாக வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், மனுதாரர்/எதிரியின், N5250119 என்ற எண்ணைக் கொண்ட இந்தியக் கடவுச்சீட்டின் காலாவதி தேதி 12.01.2026 தேதி என்றும், குறிப்பிட்ட காலத்திற்குள் அதனைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

2.2) மேலும், மனுதாரரின் கடவுச்சீட்டு இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தால் 13.01.2016 அன்று வழங்கப்பட்டது என்றும், அதன் செல்லுபடியாகும் காலம் 12.01.2026 அன்று முடிவடைந்தது என்றும், எனவே, 12.01.2026 க்கு முன்னரே புதுப்பித்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது என்றும். இதன்படி, மனுதாரர் 26.07.2025 அன்று இணையவழியாக சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் புதுப்பிப்பிற்காக விண்ணப்பித்ததாகவும், பின்னர், கோயம்புத்தூர் மண்டல கடவுச்சீட்டு அலுவலகம் 25.08.2025 தேதியிட்ட விளக்கக் கடிதத்தின் மூலம், பெருந்துறை காவல்துறையிடமிருந்து "Pending Trial on JM Perundurai in Crime No.33/2016 under Sections 279 and 304-A IPC" எனத் தகவல் பெறப்பட்டதாகவும், நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறும் அறிவித்ததின்படி மனுதாரர் நேரில் ஆஜராகி தேவையான விளக்கங்களை அளித்ததாகவும், எனினும், அவை திருப்திகரமாக இல்லை எனக் கருதிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 06.01.2026 அன்று மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பினர் என்றும், பின்னர், மனுதாரரின் கடவுச்சீட்டு புதுப்பிப்பு விண்ணப்பம் 19.01.2026 அன்று, கடவுச்சீட்டு சட்டம், 1967 இன் பிரிவு 6(2)(f)ன் கீழ், இந்நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பதை காரணமாகக் கொண்டு நிராகரிக்கப்பட்டதாகவும், ஆகையால், கடவுச்சீட்டு புதுப்பிப்பிற்காக இம்மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும், மேலும், இந்திய அரசிதழில் G.S.R. 570 மூலம் வெளியிடப்பட்டுள்ள

அறிவிப்பின்படி, குறித்த கடவுச்சீட்டை மீண்டும் வழங்குவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கடிதம் அல்லது தடையில்லாச் சான்றிதழ் (NOC) அவசியம் என கடவுச்சீட்டு அதிகாரிகள் மனுதாரருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும், மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் மீண்டும் வழங்குதல் தொடர்பாக இந்நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் முறையாகக் கடைப்பிடிப்பதாகவும், எனவே, எதிரியின் கடவுச்சீட்டு எண்.N5250119 யை புதுப்பிப்பதற்கு அனுமதி/ தடையில்லாச் சான்றிதழ் கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில், பதிலுரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. மனுதாரர்/எதிரி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**5. தீர்வு:-**

5.1) மனுதாரர்/எதிரி தரப்பில் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம், 1860 இன் பிரிவு 279 மற்றும் 304-(A) கீழ், பொய்யாக வழக்குப் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த வழக்கு கடந்த 8 ஆண்டுகளாக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரர்/எதிரி மீது, நடைமுறைச் சட்ட விதிகளையும், போக்குவரத்து விதிமுறைகளையும் முறையாகப் பின்பற்றாமல், நிகழ்நிலை புகார்தாரர் அளித்த புகாரின் அடிப்படையில் புகார்தாரர் பொய்யாக வழக்குப் பதிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

5.2) மனுதாரர்/எதிரி, N5250119 என்ற எண்ணைக் கொண்ட இந்தியக் கடவுச்சீட்டை வைத்திருப்பவர் ஆவார். அந்தக் கடவுச்சீட்டின் காலாவதி தேதி 12.01.2026 தேதி என்றும், குறிப்பிட்ட காலத்திற்குள் அதனைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். கடவுச்சீட்டின் நகல் மனுதாரர்/எதிரி தரப்பு ஆவணம் 1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது .

5.3) மேலும், மனுதாரரின் கடவுச்சீட்டு இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தால் 13.01.2016 அன்று வழங்கப்பட்டது என்றும், அதன் செல்லுபடியாகும் காலம் 12.01.2026 அன்று முடிவடைந்தது. எனவே, 12.01.2026 க்கு முன்னரே புதுப்பித்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது என்றும். இதன்படி, மனுதாரர் 26.07.2025 அன்று இணையவழியாக சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் புதுப்பிப்பிற்காக விண்ணப்பித்தார் என்றும் தெரிவித்துள்ளார். விண்ணப்பித்ததற்காக இணையதளவழி மனு இரசீது மனுதாரர்/எதிரி தரப்பு ஆவணம் 2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது .

5.4) பின்னர், கோயம்புத்தூர் மண்டல கடவுச்சீட்டு அலுவலகம் 25.08.2025 தேதியிட்ட விளக்கக் கடிதத்தின் மூலம், பெருந்துறை காவல்துறையிடமிருந்து "Pending Trial on JM Perundurai in Crime No. 33/2016 under Sections 279 and 304-A IPC" எனத் தகவல் பெறப்பட்டதாகவும், நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறும் அறிவித்தது. அதன்படி மனுதாரர் நேரில் ஆஜராகி தேவையான விளக்கங்களை அளித்தார். எனினும், அவை திருப்திகரமாக இல்லை எனக் கருதிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 06.01.2026 அன்று மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பினர் என்றும், பின்னர், மனுதாரரின் கடவுச்சீட்டு புதுப்பிப்பு விண்ணப்பம் 19.01.2026 அன்று, கடவுச்சீட்டு சட்டம், 1967 இன் பிரிவு 6(2)(f)ன் கீழ், இந்நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பதை காரணமாகக் கொண்டு நிராகரிக்கப்பட்டது என்றும், ஆகையால், கடவுச்சீட்டு புதுப்பிப்பிற்காக இம்மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். கோயம்புத்தூர் மண்டல கடவுச்சீட்டு அலுவலகம் 25.08.2025 தேதியிட்ட கடிதம் மற்றும் 06.01.2026 தேதியிட்ட நினைவூட்டல் கடிதம் மனுதாரர் தரப்பு ஆவணங்கள் 3 மற்றும் 4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

5.5) மேலும், இந்திய அரசிதழில் G.S.R. 570 மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, குறித்த கடவுச்சீட்டை மீண்டும் வழங்குவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கடிதம் அல்லது தடையில்லாச் சான்றிதழ் (NOC) அவசியம் என கடவுச்சீட்டு அதிகாரிகள் மனுதாரருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும், மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் மீண்டும் வழங்குதல் தொடர்பாக இந்நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் முறையாகக் கடைப்பிடிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவரின் கடவுச்சீட்டு எண் N5250119-யை புதுப்பிப்பதற்காக தடையில்லாச் சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5.6) மனுதாரர்/ எதிரி தாக்கல் செய்துள்ள ஆவணம் எண் 3 யை பரிசீலினை செய்கையில் மனுதாரர்/ எதிரி கடவுச்சீட்டு விண்ணப்பத்தில் முக்கியமான தகவல்களை மறைத்ததற்கான சூழ்நிலைகளை விளக்கும் முறையான விளக்கத்தை சமர்ப்பிக்க வேண்டி மண்டல கடவுச்சீட்டு அலுவலகம், கோயமுத்தூரில் 25.08.2025 ம் தேதி கடிதம் மனுதாரர்/எதிரிக்கு கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

5.7) மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள ஆவணம் எண் 4 யை பரிசீலனை செய்கையில் 25.08.2025 ம் தேதியிட்ட கடிதத்திற்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை என்றும், மேலும் 15 நாட்கள் கால அவகாசம் அளித்து பதிலை அளிக்குமாறு நினைவூட்டல் கடிதம் ஒன்றை மனுதாரர்/எதிரிக்கு கடந்த 06.01.2026 ம் தேதி, கோயமுத்தூர் மண்டல கடவுச்சீட்டு அலுவலகம், கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

5.8) மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள ஆவணம் எண் 5 யை பரிசீலனை செய்கையில் 19.01.2026 தேதியன்று, கோயம்புத்தூர் கடவு சீட்டு அலுவலகத்தால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து காவல் சரிபார்ப்பு அறிக்கையைப் பெறப்பட்டது என்றும், அதில்,

விண்ணப்பதாரர் பெருந்துறை காவல் நிலைய குற்ற எண்.33/2016-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 மற்றும் 304(A) கீழ் தொடர்புடையவராக இருப்பதும், இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிலுவையில் இருப்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இத்தகவலை விண்ணப்பதாரர் தனது கடவுச்சீட்டு விண்ணப்பம் எண் CB4075445872825, நாள் 05.08.2025-ல் வெளிப்படுத்தாமல் மறைத்துள்ளார் என்றும், இதனால், மண்டல் கடவுச்சீட்டு அலுவலகத்தால் மனுதாரர்/எதிரிக்கு காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பியது பற்றியும், நினைவூட்டல் கடிதமும் அனுப்பி, இதுகுறித்து உரிய விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.9) மேலும் அதனைத் தொடர்ந்து, மனுதாரர்/எதிரி 19.01.2026 தேதியிட்ட தனது கடிதத்தின் மூலம் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்ததுடன், மேற்கண்ட குற்றவியல் வழக்கு தமக்கு எதிராக நிலுவையில் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளதாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது .

5.10) மேலும், மனுதாரர்/ எதிரியின் கடவுச்சீட்டு விண்ணப்பம் கடவுச்சீட்டு சட்டம், 1967-ன் பிரிவு 6(2)(f)ன் கீழ் நிராகரிக்கப்படுவதாகவும், இருப்பினும், அந்த உத்தரவுக்கு எதிராக மனுதாரர்/எதிரி வெளியுறவு அமைச்சகத்தின் (Ministry of External Affairs) இணைச் செயலாளர் (PSP) மற்றும் தலைமை கடவுச்சீட்டு அதிகாரி (Chief Passport Officer) அவர்களிடம் மேல்முறையீடு செய்யலாம் என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

5.11) மனுதாரர்/எதிரி தனது கடவுச்சீட்டு புதுப்பிப்பு விண்ணப்பம் எண் CB4075445872825, நாள் 05.08.2025-ல், இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கு தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தாமல் மறைத்துள்ளார் என்பது ஆவணம் எண் 5-ல் உள்ள மண்டல கடவுச்சீட்டு அலுவலகத்தின் உத்தரவின் மூலம் தெரிய வருகிறது.

5.12) ஆவணம் எண் 5-ல் உள்ள 19.01.2026 ம் தேதியிட்ட மண்டல கடவுச்சீட்டு அலுவலகத்தின் உத்தரவை பரிசீலனை செய்தபோது, மனுதாரரின் கடவுச்சீட்டு விண்ணப்பம் கடவுச்சீட்டு சட்டம், 1967-ன் பிரிவு 6(2)(f)-ன் கீழ் நிராகரிக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது. மேற்படி உத்தரவில், மனுதாரர் இந்நீதிமன்றத்திலிருந்து தடையில்லாச் சான்றிதழ் (NOC) பெற்று வர வேண்டும் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே, இந்நீதிமன்றத்திடமிருந்து NOC பெற வேண்டுமென்பது அத்தகைய உத்தரவின் அவசியமான நிபந்தனையாக இல்லை என்பது புலனாகிறது. NOC வேண்டும் என்பதற்கான ஆவணம் எதையும் மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

5.13) மேலும், மேற்கண்ட நிராகரிப்பு உத்தரவிலேயே, அதற்கு எதிராக மனுதாரர் இணைச் செயலாளர் (PSP) மற்றும் தலைமை கடவுச்சீட்டு அதிகாரி (CPO) அவர்களிடம் மேல்முறையீடு செய்யலாம் எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளநிலையில், அங்கு மேல்முறையீடு செய்யாமல் இந்நீதிமன்றத்தில் NOC கோரி மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதாக இல்லை.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 23.06.2026 இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.23 18:11:57 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.